பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 30 (16—11—71) செவ்வாய் வெளியீடு: கார்த்திகை 1 (17—11—71) புதன் [இதழ்: 128

மேற்கு எல்லையில் அத்து மீறல்கள்

புதுடில்லி, நவ. 16—
மேற்கு எல்லையில், நவம்பர் 10-ம் நாளுக்கும் — 13-ம் நாளுக்குமிடையில் போர் நிறுத்தக் கோட்டில் 39 அத்துமீறல் சம்பவங்கள் நடந்துள்ளன.

டித்வால், ஊரிமேந்தார், நௌஷரா, பூஞ்ச் பகுதிகளில் போர் நிறுத்தக் கோட்டில் நடைபெற்ற பாகிஸ்தான் எல்லைமீறல்கள் பற்றி ஐ. நா. நோக்கர்களிடம் புகார்கள் தாக்கலாகி உள்ளன.

வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு

உலக நாடுகளுக்கு இந்தியா அளிக்கும் காலக்கெடு

இரண்டு வாரங்களில் இயலாவிடில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

புதுடில்லி, நவ. 16—
வங்க தேசப் பிரச்சினைக்குத் தீர்வு காண உலக அரசுகளுக்கு இந்தியா அளிக்கக்கூடிய அதிகபட்ச அவகாசம் இரு வார காலமேயாகும்.

இரு வாரங்களில் உலக நாடுகள் முயற்சி எடுக்காவிடில் அவசர நிலையைப் பிரகடனம் செய்து — வங்க தேசத்தை அங்கீகரித்து — வங்க தேச அரசுடன் உடனடியாகப் பாதுகாப்பு உடன்பாடு செய்துகொண்டு — விடுதலை வீரர்களுக்குப் பெரும் அளவில் உதவ அரசு தயாராக இருக்கிறது.

அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டால் விலைகள் உயராது தடுக்கவும், இன்றியமையாப் பண்டங்களும் — மூலப்பொருள்களும் நியாயமாக வழங்குவதற்கும் நடவடிக்கைகளை எடுக்க நிதியமைச்சருக்கு அமைச்சரவை அதிகாரமளித்துள்ளது.

சில இன்றியமையாப் பண்டங்கள் — மூலப்பொருள்கள் ஆகியவற்றின் விலைகளையும், விநியோகத்தையும் கட்டுப்படுத்தி நிதி அமைச்சகம் விரைவில் சில மசோதாக்களைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இவை அடுத்த சில வாரங்களில் ஒன்றன்பின் ஒன்றாக அறிவிக்கப்படலாம்.

பாகிஸ்தானில் போர்ப் பிரசாரம்

பதுங்கும் குழிகள் வெட்ட அறிவிப்பு

கராச்சி, நவ. 15—
கராச்சியில் உள்ள மக்களை, பதுங்கும் குழிகள் வெட்டி வைக்குமாறு பாகிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

மேலும், திரைப் படம் — டெலிவிஷன் காட்சிகள் மூலமும், விமானத் தாக்குதலின்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று விளக்கப்படுகிறதாம்.

'கிழக்கு வங்கத்தில் பொது தலைவலகக் கட்டிடங்கள் அருகிலும், சாலைகள் — பூங்காக்கள் — மார்க்கெட்டுகள் அருகிலும் உடனடியாகப் பதுங்கும் குழிகள் வெட்ட வேண்டும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

கலைஞர் உடல்நலம்

அமெரிக்க டாக்டர் அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 16—
நேற்றைக்கு முன்னாள் கண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் நன்கு ஓய்வெடுத்து வருகிறார் — என்று ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனையின் அறிவிப்பு ஒன்று தெரிவித்தது.

கலைஞர் அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மௌமனி என்பவர், முதல்வர் அவர்கள் இன்று அல்லது நாளை மருத்துவமனையைவிட்டு வெளியேற முடியும் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.

தொலைபேசியில் நாட்டு நிலை கேட்டறிந்தார்

சென்னை, நவ. 15—
முதலமைச்சர் கலைஞர் இன்று தொலைபேசி மூலம் சென்னை நகருடன் தொடர்பு கொண்டார்.

பொள்ளாச்சித் தேர்தலில் கழகம் வெற்றி பெற்ற செய்தி அறிந்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் டில்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி கலைஞருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது; அவருடைய உடல்நிலை குறித்து விவரம் கேட்டறிந்தார்.

தருமபுரம் மடாதிபதி மறைந்தமைக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

இன்னும் ஓரிரு நாட்களில் மருத்துவமனையைவிட்டுத் தாம் வெளிவரலாமென்றும், சிறிது ஓய்வுக்குப் பிறகு அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள இருப்பதாகவும் கூறினார்.

அமைச்சர் நாவலர் நலம் விசாரித்தார்

இன்று காலை 9-மணியளவில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பால்டிமோர் நகரில் சிகிச்சை பெற்றுவரும் கலைஞரின் உடல்நலம் பற்றித் தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்.

கலைஞருடன் இருக்கும் முரசொலி மாறன் எம்.பி. அவர்களுடன் நாவலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்; அதுபோது முரசொலி மாறன், நாவலரிடம், முதல்வர் அவர்கள் சிகிச்சை நடந்து ஓய்வு பெற்று வருகிறார் என்றும், உடல்நலம் தேறிவருகிறது என்றும், இன்னும் இரு நாட்களில் சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து வெளிவருவார் என்றும் தெரிவித்தார்.

வெளிவந்த பின்னர், இரு நாட்கள் ஓய்வுக்குப் பிறகு முதலமைச்சர் தம் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எல்லையில் பாகிஸ்தான் வாலாட்டம்

அத்துமீறி நுழைந்த படை விரட்டியடிக்கப்பட்டது

24 மணி நேரச் சண்டையில் 135 பாகிஸ்தானிகள் பலி

புதுடில்லி, நவ. 16—
மேற்கு வங்காளத்தில், நாடியா மாவட்டத்தில் சிகார்பூர் அருகில் இந்தியப் பகுதிக்குள் 4 பாகிஸ்தான் இராணுவப் பட்டாளங்கள் அத்துமீறி நுழைந்தபோது நடந்த சண்டைகளில் 135 பாகிஸ்தான் சிப்பாய்கள் மாண்டனர்; பலர் காயமடைந்தனர்; ஏராளமான பாகிஸ்தானிகள் பிடிபட்டனர்.

24 மணி நேரம் நடந்த கோரமான சண்டையில் பாகிஸ்தான் படை பின்னுக்குத் தள்ளப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்று சுமார் 2800 பாகிஸ்தான் சிப்பாய்கள் எல்லை தாண்டிவந்தனர்; அத்தருணத்தில், சிகார்பூர் அருகிலுள்ள எல்லைப் பாதுகாப்புப் படையின் படை நிலையில் அவர்களைவிட எண்ணிக்கையில் குறைந்த படை வீரர்களே இருந்ததாகத் தெரிகிறது; உடனே இராணுவத்தின் உதவி அவசரமாகக் கோரப்பட்டது. இங்கு சண்டை ஏறக்குறைய 24 மணி நேரம் நடந்தது; பாகிஸ்தானிகள் பலர் மாண்டனர்.

பாகிஸ்தான் படை எவ்வளவு தூரம் உள்ளே வந்ததென்று தெரியவில்லை; சிகார்பூர், எல்லையிலிருந்து இரண்டொரு மைலுக்குள்தான் இருக்கிறது.

ஒரே எல்லைப்புற ஊடுருவலில் 4 பட்டாளங்களைப் பாகிஸ்தான் ஏவியது இதுதான் முதல் தடவை.

நேபாளத்தில் இனக்கலவரம்

அதிகாரிகள் பதவி நீக்கம்

காத்மண்டு, நவ. 16—
கடந்தமாதத்தில் நேபாள மாவட்டம் ஒன்றில் இனக் கலவரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அம்மாவட்டத்தின் தலைமை அதிகாரிகளையும், இரு போலீஸ் அதிகாரிகளையும் நேபாள அரசு பதவி நீக்கம் செய்திருக்கிறது.

நகர டாக்சிகட்கு மீட்டர்

முனிசிபல் நகரங்களில் ஓடும் டாக்சிகள், ஆட்டோ—ரிக்ஷாக்களில் எல்லாம் 1972 சனவரி 1-ந் தேதி முதல் மீட்டர்கள் வைத்துவிட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு உத்திரவிட்டிருக்கிறது.

காயிதே மில்லத் உடல்நிலை

தேறிவருவதாகத் தகவல்

புதுடில்லி, நவ. 16—
உடல்நலக் குறைவின் காரணமாகப் புதுடில்லியிலுள்ள வெலிங்டன் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் உடல்நிலை நன்கு தேறிவருவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

டாக்டர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்துவருகின்றனர்.

விடுதலைப் படை முன்னேறுகிறது

பாகிஸ்தான் படைகள் திண்டாட்டம்

இரு துறைமுகங்கள் மூடப்படுகின்றன

கிருஷ்ணாநகர், நவ. 16—
வங்க தேச விடுதலைப் படையினர், தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்திப் பாகிஸ்தான் இராணுவத்தைத் திக்குமுக்காட வைப்பதாக எல்லைக்கு அப்பாலிருந்து வந்துகொண்டிருக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் படையினர் 22 எல்லைச் சாவடிகளைப் பிடித்துவிட்டதாகவும், 119 பாகிஸ்தான் இராணுவ வீரர்களைக் கொன்றுவிட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் படையின் தீவிரத் தாக்குதல் காரணமாகக் கிழக்கு வங்கத்தின் இரு துறைமுகங்கள் மூடப்படுவதாகப் பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

சல்னா, குல்னா என்னும் இந்தத் துறைமுகங்களில் பாதுகாப்புடன் வேலை செய்ய முடிவதில்லையாம்.

இந்திரா காங்கிரசின் தேர்தல் சின்னம்

புதுடில்லி, நவ. 16—
தலைமை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நுகத்தடி பூட்டிய இரட்டைக் காளைச் சின்னம் இந்திரா காங்கிரசிற்குக் கிடைத்திருக்கிறது.

ஆனால், இடைத் தேர்தலில் கட்சிக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்த பசுவும் — கன்றும் சின்னத்தையே இந்திரா காங்கிரசு பயன்படுத்தும்.

இரட்டைக் காளைச் சின்னத்தை வேறு எந்தக் கட்சியும் கோரிப் பெற முடியாது.

அகதிகளின் பங்கீட்டு அட்டைக்கும் ஆபத்து?

பாகிஸ்தான் இராணுவத்தின் தந்திரம் பலிக்குமா?

முஜிபுர் நகர், நவ. 16—
இந்தியாவுக்கு வந்திருக்கும் அகதிகளின் பங்கீட்டு அட்டைகளை எப்படியாவது பெறறுக்கொள்ள வேண்டுமென்று பாகிஸ்தான் இராணுவம் முயன்றுகொண்டிருக்கிறதாம்; அட்டை ஒன்றுக்கு ரூ. 100-வரையில் இவர்கள் தர முன்வருகிறார்களாம்; ஆனால், அகதிகள் யாரும் பாகிஸ்தான் துருப்புக்களிடம் ஏமாறுவதில்லையாம்.

இந்த அட்டைகளைக் காட்டி 'வங்க அகதிகள் திரும்பிவருகிறார்கள்' என்று உலகை நம்ப வைக்கவே பாகிஸ்தான் இம்முயற்சியில ஈடுபட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

மேலும், இந்த அட்டைகளைத் தமது உளவாளிகளிடம் தந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கும் திட்டமிட்டிருக்கிறதாம்.

வங்க விடுதலைப் படையின் பாசறை

வீரஞ் செறிந்த போராட்டத்துக்குப்பின் சுதந்தரமாகத் திகழும் கிராமங்கள்

நூர்ஹாட்டும் – அண்டைக் கிராமங்களும் வெளித் தோற்றத்தில், கிழக்கு வங்கத்தின் மற்றக் கிராமங்களைப் போலவேதான் உள்ளன ; ஆனால், அந்தக் கிராமங்களுக்குத் தனிப் பெருமை ஒன்று உண்டு ; குருதி வெறிகொண்ட பாகிஸ்தான் படைகளிடமிருந்து குல்னு மாவட்டத்தில் 'சுதந்தரப் படையால் முதன்முதலாக விடுவிக்கப்பட்ட கிராமங்கள்' என்ற பெருமைக்குரியவை அவைகள் !

கடந்த மே மாதத்தில் பாகிஸ்தான் படைகள் இந்தக் கிராமங்களின்மீது பாய்ந்தன ; பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விட்டன ; அவர்களது காட்டுமிராண்டித்தனத்தின் அடையாளங்களாக, ஒவ்வொரு கிராமத்திலும் எரித்து சாம்பலாக்கப்பட்ட வீடுகளின் பழுதுபட்ட சுவர்கள் நிற்கின்றன !

பாகிஸ்தான் படைகள் இங்கு இரு முகாம்களை அமைத்துக் கொண்டன ; பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொண்டன ; ஆனால், அவற்றின் அரணுலோ – கண்ணி வரிசைகளாலோ தீர்மானமாகப் புறப்பட்டுவிட்ட வங்க கொரில்லாக்களைத் தடுக்க முடியவில்லை !

ஒருநாள் இரவு கொரில்லாக்கள், சுற்றிலுமிருந்த புதர்களில் கூடி, பாகிஸ்தான் படையினரைத் திணறடித்து விட்டனர் ! முகாம்களிலிருந்து பாகிஸ்தான் படையினரை விரட்டியடித்தே விட்டனர் !

உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்து கொரில்லாவாக மாறியிருக்கும் கேப்டன் ஷாஜகான், ஒரே ஒரு முகாமில் மட்டும் நான்கு பாகிஸ்தான் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும் -- அவர்கள் அருகே ஓரிடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அந்த இரு முகாம்களிலும் இப்போது செங்கல் சுவர்களைத் தவிர வேறு மிச்சம் ஏதுமில்லை. அந்தச் சுவர்களில்கூட, இடைவெளி ஓட்டைகள் ; அவற்றைச் சுற்றி சரி நேரில்லாத பற்பல அரண்கள் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் இருநூறு கண்ணிகள் வரையில் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன !

இந்தக் கிராமங்களில் வாழ்க்கை மீண்டும் படிப்படியாக இயல்பான நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றன ; பாகிஸ்தான் படைக்குப் பயந்து ஓடியவர்களில் சில பலர் திரும்பவும் ஊருக்கு வந்துவிட்டனர் ; ஆனாலும், மக்கள் தொகை மிகக் கொஞ்சமே !

சில கடைகள் திறந்திருக்கின்றன ; உழவர்கள் இங்கும் அங்குமாக மாடுகள் பூட்டிக் கழனிகளில் உழுகிறார்கள் ; ஒரு புதிய நிர்வாகம் படிப்படியாக உருப்பெற்று வருகிறது.

இவைகளெல்லாம் மேலோட்டத்தில்தான் ; அடித்தளத்திலோ, இன்னும் மனம் அலைபாய்ந்துகொண்டுதான் இருக்கின்றன ; இங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இன்னும் பாகிஸ்தான் முகாம் உள்ளன !

இளைய கொரில்லாக்கள் -- இவர்களில் பெரும்பாலோர் இருபது வயதுக்குட்பட்டவர்கள் -- கிராமங்களுக்கிடையே சென்று வரும் மண் பாதைகளில் ரோந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் ; அவர்களது தோள்களில் ரைபிள்கள் தொங்குகின்றன ; அவர்கள், இருவர் -- மூவராக சைக்கிள்களில் செல்கிறார்கள் ; அல்லது நடந்து செல்கிறார்கள்.

"இந்தக் கான்களுக்கு (யாகியாகானின் ஆட்களுக்கு) மீண்டும் இந்தக் கிராமங்களைப் பிடிப்பது என்பது எளிதில்லை ; ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கொரில்லா வீரன் இருக்கிறான் ; விவசாயம் செய்தல் -- மரம் வெட்டுதல் என்ற தமது வழமையான தொழிலையும் அவர்கள் பார்த்து வருகின்றனர் ; ஆனால் ரைஃபிளை—ஸ்டென் கன்னை'-- அல்லது 'லைட் மெஷின் கன்'னை இயக்க அவர்களுக்குத் தெரியும் ; அவர்கள் இளைஞர் ; எதிர்ப்பாற்றல் நிறைந்தோர் ; செயலுரம் ததும்புவோர் ; நொடியில் அவர்களால் போருக்குத் தயாராக முடியும் ; எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்கள் மக்களின் நெஞ்சு நிறைந்த ஆதரவை அனுபவிக்கிறார்கள்" என்று ஷாஜகான் கூறினார்.

இந்தக் கொரில்லாக்களுக்கு, முன்பு கிழக்கும் பாகிஸ்தான் ரைஃபிள் படையிலிருந்த ஓர் அதிகாரியால் கிராமங்களில் இரண்டு -- மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது ; இவர்களுக்குச் சம்பளம் இல்லை ; சம்பளத்தை விரும்புவதும் இல்லை.

இவர்கள் தமது துப்பாக்கிகள் குறித்துப் பெருமைப்படுகிறார்கள் ; தமது தாயக விடுதலைக்காகப் பாடுபட வாய்ப்புக் கிடைத்ததே--என்று வாய்ப்பில் மகிழ்கிறார்கள் !

ஒவ்வொரு மாலைப்பொழுதிலும் பற்பல இளைஞர்கள் கிராமத்தின் மத்தியிலுள்ள விளையாட்டுத் திடலில் கிடைத்த உடைகளை உடுத்திக் கொண்டு பயிற்சிக்குத் தயாராகிறார்கள்.

பழைய கிழக்குப் பாகிஸ்தான் 'ரைபிள்' படையைச் சார்ந்த ஒருவர் பயிற்சி தருகிறார் ; அவரது ஆணைப்படி இந்த இளைஞர்கள் 'இரு' என்றால் இருக்கிறார்கள் ; 'படு' என்றால் படுக்கிறார்கள் ; தம் துப்பாக்கிகளை எதிரி எதிரே நிற்பதுபோல சுடுகிறார்கள் !

கடந்த வெள்ளியன்று நடந்த பயிற்சி, இடையிலேயே திடீரென நின்றது ; துப்பாக்கிச்சுடும் பயிற்சி நடந்துகொண்டிருந்தபோது, அப்துல் கனி என்ற பதினெட்டு வயது மாணவன் சைக்கிளில் வந்தான் ; "காளி கஞ்ச்--சத்கிரா சாலையிலுள்ள ஷாகிர்பூர் என்ற கிராமத்தில், பாகிஸ்தான் படையினர் கண்மூடித்தனமாகச் சுடுகின்றனர்" என்றான் ; அது, அந்த ஊருக்கு மூன்று கிலோ மீட்டர் தொலைவில் தான் இருக்கிறது.

"லுங்கியும் சட்டையும் அணிந்திருந்த அப்துல் கனி, 'ரஜாக்கர்கள் (பாகிஸ்தான் வெறியர்கள்) வந்த பஸ் ஒன்றை நோக்கி நமது கொரில்லாக்கள் சுட்டார்கள் ; அந்த பஸ் தப்பிப்போய்விட்டது ; ஆனால், ஐந்து நிமிடத்திற்குள் ஒரு டிரக்கில் பாகிஸ்தான் படையினர் வந்துவிட்டனர் ; எல்லாத் திசையிலும் சுடுகின்றனர்' என்றும் அந்த மாணவன் கூறினான்.

பயிற்சி பெறுபவர்களைக் கலையும்படி சொன்னார் ஆசிரியர்.

ஆனால் அடுத்த சில நிமிடங்களுக்குள் மற்றொரு வாலிபன் வந்து, 'பாகிஸ்தான் படைகள் போய்விட்டன' என்றான்.

பயிற்சி ஆசிரியர், யு. என். ஐ. நிருபரைப் பார்த்து, 'நாங்கள் கொரில்லாக்கள் ; பகைவன் முன்னேறும்போது நாங்கள் பின்வாங்குகிறோம் ; நேரடி மோதல் -- குறைந்தது இந்தக் காலக் கட்டம்வரை -- எங்கள் நோக்கமில்லை' என்றார்.

சேலம் இரும்பாலைபற்றிய ஐயம் வேண்டாம்

திட்டமிட்டபடி வேலைகள் துவங்கும்

தொழில் அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

சேலம், நவ. 14—

"சேலம் இரும்பு ஆலை அமைக்கும் பணி எந்தவிதத்திலும் தாமதப்படாது ; ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெறும்"

என்று தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார் ; செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது :—

"ஏழாண்டுக்குமுன் தஸ்தூர் கம்பெனி தயாரித்து அளித்த அறிக்கையில், 'சேலம் இரும்புத் தாது, சிறப்பு உருக்குத் தயாரிப்பதற்குத் தகுதியானதே' என்று ஐயத்துக்கு இடமின்றி தெரிவித்துள்ளது.

"சேலம் ஆலையில் எந்த வகை உற்பத்தியை மேற்கொள்வது என்பது பற்றிய அறிக்கை இன்னும் சில வாரங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; அதன் அடிப்படையில் வேலைகள் துவங்கும்.

"மத்திய உருக்குத் துறை அமைச்சர்கூட, 'திட்டமிட்டபடி சேலம் ஆலை வேலைகள் துவங்கும்' என்றுதான் கூறியுள்ளார்."

மக்களவையில் ஏற்பட்ட அமளி

புதுடில்லி, நவ. 16—

மக்களவையின் மாரிக் காலத் தொடர் கூட்டம் நேற்று துவங்கி --கேள்வி நேரம் முடிந்தவுடனேயே அவையில் அமளி ஏற்பட்டது.

ஓர் அவசரத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி இடது கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் ஒரு மணி நேரம்வரை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவைத் தலைவர், இடது கம்யூனிஸ்டு உறுப்பினர்களின் தீர்மானத்தை அனுமதிக்கவில்லை.

அவைத் தலைவர் கூறியதையும் மீறி சில சமயங்களில் உறுப்பினர்கள் பேசிக்கொண்டே இருந்தனர் ; ஒரு மணி நேரம் இவ்வாறு வாதப்பிரதிவாதம் நடந்து கொண்டேயிருந்தது.

இறுதியில் அவைத் தலைவர் இடைவேளைக்காக அவையை ஒத்திவைத்தார் ; 'உறுப்பினர்கள் நிதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும்' என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மின் சார ஊழியர்கட்கு ஊதிய உயர்வு

சென்னை, நவ. 16—

மதுரை, கோவை, கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர் நகராட்சிகளில் பணியாற்றும் மின்சார ஊழியர்களுக்கு, ஊதியக் கமிஷன் சிபாரிசுப்படி ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த உயர்வு 1970 அக். 2-ந் தேதியிலிருந்து கணக்கிட்டுத் தரப்படும்.

அரசு அலுவலகத்தில் கல்வி -- உள்நாட்டுத் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன், மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன், ஊழியர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில், மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

சென்னையில் குழந்தைகள் நாள் விழா

அமைச்சர் என். வி. நடராசன்-- எஸ். இராமச்சந்திரன் பங்கேற்பு

சென்னை, நவ. 15—

பண்டித ஜவகர்லால் நேருவின் 82-வது பிறந்த நாள் விழா -- குழந்தைகள் நாள் விழாவினையொட்டி நேற்று இராஜாஜி மண்டபத்தில் ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

கலைவாணர் அரங்கில், குழந்தைகளுக்காக இரு ஜப்பானியப் படங்கள் வெளியிடப்பட்டன.

புத்தகக் கண்காட்சியை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

திறப்பு விழாவிற்கு, உயர் நீதிமன்ற நீதிபதி பி. ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமைதாங்கினார்.

பள்ளிப் படிப்புத் துறை இயக்குநர் சிட்டிபாபு, அனைவரையும் வரவேற்றார்.

6 வயது முதல் 17 வயதுள்ளவர்கள் வரைந்த ஓவியங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கலைவாணர் அரங்கில் ஜப்பானியத் திரைப் படக் காட்சியை, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இவ்விழாவிற்கு, திரு. ஏ. எல். சீனிவாசன் தலைமைதாங்கினார்.

இரு ஜப்பானியப் படங்கள், நான்கு காட்சிகளில் திரையிடப்பட்டன ; 8,000-க்கும் அதிகமான குழந்தைகள் இப்படங்களைக் கண்டுகளித்தனர்.

மற்றும் நகரிலுள்ள பல்வேறு திரைப்பட அரங்குகளிலும், குழந்தைகளுக்காகத் தனித் திரைப் படக் காட்சிகள் நடைபெற்றன.

பல இடங்களில், குழந்தைகள் நாளையொட்டி பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் -- கூட்டங்களும் நடைபெற்றன.

சென்னை உயர்நீதிமன்றத்தில் திருச்செந்தூர்

மக்களவைத் தொகுதி தேர்தல் வழக்கு

தி.மு.க. வெற்றி உறுதி

சுதந்தராக் கட்சி வேட்பாளர் மனு தள்ளுபடி

மறு எண்ணிக்கையில் கூடுதல் வாக்குகள்

சென்னை, நவ 16—

திருச்செந்தூர் மக்களவைத் தொகுதியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் எம். எஸ். சிவசாமி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று ஆட்சேபித்து அத்தொகுதியில் போட்டியிட்டுத் தோற்ற சுதந்தராக் கட்சி வேட்பாளர் டாக்டர் எம். மத்தியாஸ் தாக்கல் செய்திருந்த தேர்தல் மனுவை, சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி என். எஸ். இராமசாமி தள்ளுபடி செய்தார்.

தி. மு. கழக வேட்பாளர் வெற்றி பெற்றதாகத் தேர்தல் அதிகாரி அறிவித்தபின், தேர்தலில் முறைகேடுகள் இருப்பதாகக் கூறி டாக்டர் மத்தியாஸ், தேர்தல் மனு தாக்கல் செய்திருந்தார்.

முதல் எண்ணிக்கையின் முடிவு அறிவிக்கப்படவிருந்த நேரத்தில் திரு. எம். எஸ். சிவசாமி, 'எல்லா வாக்குகளையும் திரும்ப எண்ண வேண்டும்' என்று கோரினார் ; இதை, மனுதாரர் ஆட்சேபித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு தேர்தல் அதிகாரி, 'செல்லாத வாக்குகள் (மொத்தம் 14,382) திரும்ப எண்ணப்பட வேண்டும்' என்று கூறினார்.

இந்த மறு எண்ணிக்கைக்கும் பிறகு, 'தி. மு. கழக வேட்பாளர் 26 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்' என்று தேர்தல் அதிகாரி அறிவித்தார்.

இதை எதிர்த்தே டாக்டர் மத்தியாஸ் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் ; 'செல்லாத வாக்குகள் அனைத்தையும் மறுபடியும் எண்ணுவதற்குத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது ; செல்லாதவை என்று அறிவிக்கப்பட்ட வாக்குகளை மீண்டும் எண்ணவேண்டும்" என்றெல்லாம் தமது மனுவில் அவர் கூறியிருந்தார்.

அதன்படி, முன்பு, 'செல்லாதவை' என்று அறிவிக்கப்பட்ட 14,382 வாக்குகள் மீண்டும் நீதிமன்றத்தில் எண்ணப்பட்டன ; இதில், 'தகராறுக்குரியவை' என்று கருதப்பட்ட 645 வாக்குகளை, நீதிபதி நேரில் பரிசீலனை செய்தார்.

நீதிபதி தீர்ப்பு

மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு அளித்த நீதிபதி, 'எல்லா வாக்குகளையும் அல்லது எந்த வாக்குகளையும் மறுபடியும் எண்ண தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு' என்று கூறினார்.

மறு பரிசீலனையில் பிரதிவாதி எம். எஸ். சிவசாமிக்குக் கூடுதலாக 9 வாக்குகள் கிடைத்திருப்பதாகவும், எனவே, வாக்கு வித்தியாசம் 26-லிருந்து 35-ஆக அதிகரித்திருப்பதாகவும் கூறினார்.

'பிரதிவாதி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லும்' என்று கூறினார்.

வாக்குச் சீட்டுகளில் இரசாயனமா?

ஜன சங்க வேட்பாளர்களின் புகார் மனுக்கள் தள்ளுபடி

புதுடில்லி, நவ. 16—

சென்ற மார்ச் மாதத்தில் இரு டில்லி மக்களவைத் தொகுதித் தேர்தல்களில் இரசாயனம் கலக்கப்பட்ட வோட்டுச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டன என்று தேர்தலில் தோல்வியடைந்த ஜனசங்க வேட்பாளர்கள் கூறியிருந்த புகாரை டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். என். ஆண்டிலி நிராகரித்தார்.

தலைமை நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க நீதிபதி ஆண்டிலி, இத்தேர்தலில் பயன்படுத்தப்பட்ட சில நூறு வாக்குச் சீட்டுகளைப் பரிசோதித்துப் பார்த்தார் ; அதன் பலனாகத்தான் இவ்வாறு உத்திரவிட்டார்.

"மேற்கொண்டு வாக்குச் சீட்டுகளைப் பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை" என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

"பரிசோதனை செய்வதற்காகப் பொறுக்கியெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி அரக்கு முத்திரை வைத்து, நீதிமன்றப் பதிவாளரின் பாதுகாப்பில் வைக்க வேண்டும்" என்றும் நீதிபதி கூறினார்.

வாக்குச் சீட்டுகளில் மோசடியா?

சோஷலிஸ்டுத் தலைவர் மனு தள்ளுபடி

இந்திரா காந்தி தேர்தல் எதிர்ப்பு மனு தள்ளுபடி

அலகாபாத், நவ. 16—

சென்ற பொதுத்தேர்தலில் உத்தரப் பிரதேசம் ரே பரெய்லி மக்களவைத் தொகுதியில் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குச் சீட்டுக்கள் பரிசோதிக்கப்பட வேண்டுமெனக் கோரி சோஷலிஸ்டுத் தலைவர் இராஜ் நாராயண் தாக்கல் செய்த மனுவை அலகாபாத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இராஜ்நாராயண் இந்திரா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்றவராவார்.

திருமதி இந்திரா காந்திக்கு ஆதரவாகப் பதிவான வாக்குகளில், 'வாக்காளர்களால் முத்திரையிடப்படவில்லை ; இயந்திரக் கருவிகள் மூலம் முத்திரையிடப்பட்டன' என்று இராஜ்நாராயண் புகார் கூறியிருந்தார்.

இந்திரா காந்திக்கு ஆதரவாகப் பதிவாகியுள்ள வாக்குகளில் 600 வாக்குகளும், இராஜ்நாராயணனுக்கு ஆதரவாகப் பதிவாகியுள்ள வாக்குகளில் 200 வாக்குகளும் ஆரம்பப் பரிசோதனைக்காக நீதிபதியால் உத்தரவிடப்பட்டன ; இரு தரப்பினரின் வழக்கறிஞர்கள் முன்னிலையில் இந்த வாக்குச் சீட்டுக்கள் பரிசோதனை செய்யப்பட்டன.

மனுதாரர் புகார் கூறியபடி, இயந்திரக் கருவியின்மூலம் வாக்குச் சீட்டுக்களில் முத்திரையிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்றும், முத்திரைகள் வாக்குச் சீட்டுக்களில் பல வெவ்வேறு இடங்களில் விழுந்துள்ளன என்றும் நீதிபதி கூறினார்.

"மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், ஒவ்வொரு வாக்குச் சீட்டையும் பரிசோதனை செய்யுமாறு கூறப்பட்டார்கள் ; அவர்கள் பரிசோதனை செய்தார்கள் ; ஒரே மாதிரியாக முத்திரையிடப்பட்டதாக அவர்களால் காட்ட இயலவில்லை" என்று நீதிபதி கூறினார்.

சென்னை 3-வது வட்ட எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

சென்னை 3-வது வட்டம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல், 10—10—71 அன்று நடைபெற்றது ; வட்டச் செயலாளர் வி. பி. எம். ஏழுமலை தேர்தல் ஆணையாளராக இருந்தார் ; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : பி. பெருமாள் ; செயலாளர் : க. விநாயகமூர்த்தி ; பொருளாளர் : தா. வீரங்கன் ; துணைச் செயலாளர் : தே. க. தண்டபாணி ; காப்பாளர் : கு. ஏ. செல்வராசு ; செயற்குழு உறுப்பினர்கள் : வ. சந்திரன், சி. கோபால், க. தங்கராசு, து. நடராசன், க. தனசேகரன், ஆறுமுகம், கு. காத்தவராயன்.

பாகிஸ்தான் உளவாளிகளின் நாசவேலை

பசிர்ஹாத், நவ. 16—

பாகிஸ்தான் உளவாளிகளின் நாசவேலை காரணமாக இங்கு இரயில் பாதையின் ஒரு பகுதியும் -- எஞ்சினின் ஒரு சிறு பாகமும் சேதமடைந்தன.

இரயில் பாதையில் வெடி வைக்கப்பட்டிருந்தது ; அதிகாலை 4-மணிக்கு இந்த விபத்து ஏற்பட்டது. யாரும் காயமடையவில்லை.

சிறந்த குழந்தை இலக்கியங்கட்குப் பரிசு

திரைப்பட அதிபர் அறிவிப்பு

சென்னை, நவ. 16—

"குழந்தைகளுக்காக வெளியாகும் சிறந்த கவிதை நூலுக்கும், வாழ்க்கை வரலாற்று நூலுக்கும் ஆண்டுதோறும் முதற் பரிசாகத் தங்கப் பதக்கங்களும், இரண்டாம் பரிசாக வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும்"

என்று திரு. ஏ. வி. மெய்யப்பன், குழந்தை எழுத்தாளர் சங்க விழாவில் அறிவித்தார்.

7 ஆசிரியர்கள் இயற்றி, 11 பதிப்பாளர்கள் தயாரித்த 16 குழந்தை நூல்களை ஒன்றாக வெளியிட்ட திரு. மெய்யப்பன், மிகச் சிறு குழந்தைகளுக்கான பாடல்களை இசைத் தட்டில் வெளியிடப் போவதாகவும் கூறினார்.

குழந்தைகள் நாள் விழாவையொட்டி பதினைந்தாவது ஆண்டாக தொடர்ந்து புதுக் குழந்தை நூல்களை வெளியிட்டு நடத்தப்பெறும் இந்த விழாவுக்கு டாக்டர் பா. நடராசன் தலைமை தாங்கினார்.

குழந்தை இலக்கியம் தமிழில் தழைத்தோங்க அரசினர் மானியம் வழங்குதல் அவசியம் எனவும், ஆண்டுதோறும் குழந்தைகள் நாளை, குழந்தை நூல்கள் வெளியிட்டுக் குழந்தை எழுத்தாளர் சங்கம் கொண்டாடிவருவது பாராட்டுக்குரியது என்றும், எளிய நடையில் நல்ல கருத்துக்களை எழுதி வரும் எழுத்தாளர்கள் தொகை பெருகிவருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் டாக்டர் நடராசன் குறிப்பிட்டார்.

நூலாசிரியர்களையும் -- பதிப்பாளர்களையும் குமாரி குயிலி இராஜேசுவரி அறிமுகம் செய்துவைத்தார்.

சங்கம் நடத்திய நாவல் போட்டியில் முறையே முதலாவது—இரண்டாவது — மூன்றாவது பரிசுகள் பெற்ற திரு. ஈ. எஸ். அரிகரன், ஜோதிர் லதா, வி. பார்த்தியன், ஆகியோருக்கும், அறிவியல் போட்டியில் முறையே முதலாவது—இரண்டாவது — மூன்றாவது பரிசுகளைப் பெற்ற என். கே. வேலன், பிறையணிவோன், ப. நா. பாலசுப்பிரமணியன ஆகியோருக்கும் திரு. ஏ. வி. மெய்யப்பன் வெள்ளிப் பதக்கங்கள் வழங்கினார்.

பரிசு பெற்ற எழுத்தாளர்களை திரு. தம்பி சீனிவாசன அறிமுகம் செய்து வைத்தார்.

துவக்கத்தில் சங்கத் தலைவர் திரு. அழ. வள்ளியப்பா அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், குழந்தைகள் நூல் நிலையம் பெருகவேண்டியதன் அவசியத்தைக்கூறி, 'குழந்தை நூல் விற்பனையில் பெற்றோர்கள் உதவ வேண்டும்' என்ற கருத்தையும் வெளியிட்டார்.

'நினைவுக்குத் தேர்வு நடத்திப் பயனில்லை'

'திறமைக்குத் தேர்வு நடத்தும் காலம் வரவேண்டும்'

கல்வி அமைச்சர் நாவலர் கருத்துரை -- நூலறிவை வளர்க்க நடவடிக்கை

சென்னை, நவ. 16—

"மற்ற நாடுகளில் திறமைக்குத் தேர்வு வைக்கிறார்கள் ; நாம் நினைவுக்குத் தேர்வு வைக்கிறோம் ; அதனால்தான், நாளைக் காலையில் தேர்வு என்றால், இன்று இரவு மட்டும் சில கேள்விகளுக்கு விடையை மாணவர்கள் மனப்பாடம் செய்கின்றனர் ; இந்த நிலை தொடங்குமானால், அறிவு வளராது.

"பரீட்சைக்காக என்பதற்கு மட்டும் இல்லாமல் அறிவுக்காகவும் மாணவர்கள் படிக்க வேண்டும்.

"இங்கே விஞ்ஞானம் படிப்பவர்கள் இருக்கிறார்கள் ; ஆனால், விஞ்ஞான மனப்பான்மை உடையவர்கள் கிடையாது ; இதனால்தான் நாம் பின்தங்கி நிற்கிறோம்.

"மற்ற நாடுகள் மிக வேகமாக முன்னேறிச் செல்கின்றன ; மற்ற நாடுகளைப்போல் நாமும் முன்னேற வேண்டும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

'நூலக உணர்வு' என்ற நூலை யிட்டு நாவலர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"'நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் -- பண்புடையாளர் தொடர்பு' என்று வள்ளுவர் சொல்லியதற்கேற்ப நூல் தரும் இன்பத்தை உணர்ந்து, பொது அறிவு நூல்களை அனைவரும் படிக்க வேண்டும் ; தமிழ் வளர நல்ல எழுத்தாளர்கள் தேவை ; எழுதுவதை வாங்குவதற்கு அன்பர்கள் தேவை ; இல்லையென்றால், மொழி போதிய அளவுக்கு வளராது.

நம் நாட்டைவிடக் குறைந்த வசதி -- வாய்ப்புக்களைக் கொண்ட நாடுகள் எல்லாம் தங்கள் மொழி வளர்ச்சி அடையச் செய்வதற்கு எழுத்தாளர்களை ஊக்குவிக்கின்றன ; நம் நாட்டில் அத்தகைய உணர்வு இன்னும் ஏற்படவில்லை.

இங்கு பட்டம் பெற்ற பட்டதாரிகள், நூற்றுக்கு ஒன்றரை பேர்தான் உள்ளனர் ; அவர்களிடம் நூலுணர்வு பெற்றவர்கள் இல்லை ; அப்படி ஏற்படுவதற்கு, பள்ளி -- கல்லூரியிலேயே அந்த உணர்வு வர வேண்டும்.

பள்ளிப் பருவத்திலேயே ஆழப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் ; இந்தத் தலைமுறையில் செய்யாவிட்டால் வேறு எந்தத் தலைமுறையிலும் இதைச் செய்ய முடியாது.

ஆகவே, பாட நூல்களைப் படிப்பதுடன் பொது அறிவு நூல்களைப் படிக்கச் செய்யுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்."

நவ. 14-ம் நாள் காலை 10 மணிக்குத் தமிழ்க் கலைப் பெருமன்றத்தின் சார்பில், தமிழ் விழா, சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டடச் சொற்பொழிவரங்கில் நடைபெற்றது. அதுபோது, 'நூலக உணர்வு' என்ற தில்லை நாயகம் எழுதிய நூலை வெளியிட்டுப் பேசுகையிலேயே நாவலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவுக்குச் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் தலைமைவகித்தார்.

டாக்டர் ந. சஞ்சீவி வரவேற்புரையாற்றினார்.

கல்வி இயக்குநர் சிட்டிபாபு, பொள்ளாச்சி நா. மகாலிங்கம், சி. கே. சாமி, 'தென்னகம்' ஆசிரியர் கே. ஏ கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினர்.

பரீட்சை முறை மாறும்

கல்வி இயக்குநர் சிட்டிபாபு தகவல்

'அறிவைச் சோதிக்கும்வகையில் அமையும்' என விளக்கம்

விழுப்புரம், நவ. 16—

விழுப்புரத்தை அடுத்துள்ள வளவனூர் அரசினர் (ஆண்கள்) உயர்நிலைப் பள்ளியில், விஞ்ஞானக் கருவிகள் உட்பட ரூ. 40,000 மதிப்பில் கட்டப்பட்ட விஞ்ஞான ஆய்வுக் கூடத்தை, தமிழ்நாடு கல்வி இயக்குநர் எஸ். வி. சிட்டிபாபு 11—11—71 அன்று திறந்துவைத்தார் ; அவர் பேசுகையில் கூறியதாவது :—

"எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு என்பது ஒரு 'பாஸ்போர்ட்'தானே தவிர, அறிவுச் சோதனை அல்ல ; ஆகவே, தேர்வு முறை ஒழிந்தால்தான் அறிவு வளரும்.

"தேர்வு முறையை ரத்து செய்வது பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது ; அடுத்த ஆண்டுமுதல் ஒன்றுமுதல் ஐந்தாம் வகுப்பு வரை தேர்வு முறையை ஒழித்தும் புதிய பாடத் திட்டத்தைப் புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

"அரசினர் எல்லாவற்றையும் செய்தாலும் மக்களும் நன்கொடை வழங்கினால்தான் கல்வி வளர்ச்சியில் அக்கறை ஏற்படும்."

இவ்விழாவிற்குப் பள்ளிக் கட்டடக் குழுச் செயலாளர் திரு. என். கே. எஸ். விஷ்வக்சேன் தலைமை தாங்கினார்.

கட்டடக் குழுத் தலைவர் இரங்கநாதம் அனைவரையும் வரவேற்று இயக்குநருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் எம். இராமன், மின்விளக்கை ஏற்றி வைத்தார்.

விஞ்ஞானி ஆல்பிரட் ஐன்ஸ்டின் படத்தை டாக்டர் தியாகராசன் திறந்துவைத்தார்.

தென்னாற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி கே. கந்தசாமி கல்விப் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார்.

வளவனூர் ஊராட்சி ஒன்றியத் தலைவரும -- தென்னாற்காடு மாவட்ட திரைப்பட உரிமையாளர்கள் சங்கத் தலைவருமான எம். இராசரத்தினத்தால் டேப் ரிகார்டரை (பள்ளிக்கு நன்கொடையாக வந்தது) இயக்கி வைக்கப்பட்டது.

விழுப்புரம் கல்வி அதிகாரி திருமதி சிவகாமசுந்தரி, விழுப்புரம் கல்வி மாவட்ட உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் -- டிப்டி இன்ஸ்பெக்டர்களின் ஒரு நாள் ஊதியமான தொகை ரூ. 5,781.30-க்கான 'டிராப்டை', முதலமைச்சரின் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு நிதிக்காக அளித்தார்.

கல்வி இயக்குநர் சிட்டிபாபுவுக்கும் -- விஷ்வக்சேன நாயுடுவுக்கும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

பள்ளித் தலைமை ஆசிரியர் சவுரிராசன் நன்றி கூறினார்.

சமுதாயக் குறைபாடுகளை நீக்கப் பாடுபட்டவர் நேரு

அறிவியல்மனப்பான்மை வளர அரும்பாடுபட்டார்

'அவருக்கு விழா எடுப்பதன் மூலம் நல்லஎதிர்காலத்தை உருவாக்குவோம்'-- நாவலர் விளக்கம்

சென்னை, நவ. 15—

"இந்தியாவின் முடிசூடா மன்னர் -- ஆசியாவின் தனிப் பெருஞ்ஜோதி -- மனிதருள் மாணிக்கம் -- என்றெல்லாம் புகழப்படும் பண்டித ஜெவகர்லால் நேருவின் பிறந்த நாளை நாம் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

'வீழ்ச்சியுற்ற இந்தியாவிற்கு எழுச்சி தந்து -- விடுதலை பெறுவதற்காகத் தனையே நாட்டுக்கு அர்ப்பணித்து -- நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் நேரு !

"சமுதாயத்தில் உள்ள பல்வேறு குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமானால், முதலில் குழந்தைகளிடம் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து -- நாடு ஏற்றம் பெற அறிவியல் மனப்பான்மையை பெற வேண்டும் என்று அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்தார் ; அவருடைய நல்ல பண்பையும், தொண்டையும் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் நாம் நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நேற்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற நேரு பிறந்த நாள் விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

நேருவின் 82-வது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழாவில் மாணவ -- மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ -- மாணவிகளுக்கு திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் வழங்கினார்.

விழாவில், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் கலந்துகொண்டு பேசினார்.

செய்தித் துறை இயக்குநர் நாகராசன் வரவேற்றுப் பேசினார்.

விழாத் தொடக்கத்தில் செல்வி காயத்திரியின் வீணை நிகழ்ச்சி நடந்தது.

இருதயத் துடிப்பை அறிவிக்கும் புதிய சாதனம்

மிக ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளியை ஆம்புலன்சு வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு மருத்துவமனைக்கு விரைகிறோம் ; போகும்போது அவருடைய இருதயத் துடிப்பு எப்படி இருக்கிறது என்பதை, தொடர்ந்து மருத்துவமனைக்குத் தெரிவிக்கும் ஒரு சாதனம் பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

இருதயத் துடிப்பை ஒலி அலைகளாக மாற்றி -- அதனை ரேடியோ ஒலிபரப்புப்போல் மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு இந்தப் புதிய சாதனம் பயன்படுகிறது ; மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள ஒரு தனி 'ரிசீவிங் செட்', அந்த ஒலி அலைகளை மீண்டும் இருதயத் துடிப்பு சிக்னல்களாக மாற்றி -- கார்டியோகிராப் கருவியை இயக்குகிறது ; இதுதான் புதிய சாதனங்கள் இயங்கும் விதம்.

எந்த நிலையையும் சமாளிக்கத் தயார்

ஆக்கிரமிப்பாளரின் மண்ணிலேயே போரை நடத்துவோம்

ஊடுருவுவதில் ஈடுபடும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும்

அமைச்சர் ஜெகஜீவன்ராம் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 15—

" நமது பகுதிகளில் பாகிஸ்தான் ஏதாவது தாக்குதல் நடத்தினுல் அதை முறியடிக்க நாம் உறுதி கொண்டிருக்கிறோம் ; அத்துடன் ஆக்கிரமிப்புச் செய்பவர்களின் நாட்டுக்குள்ளேயே புகுந்து போரை நடத்துவோம்.

" ஊடுருவல் செய்யும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும்படி இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

" மூன்ருவது தட்வையாக நம்மீது போர் தொடுக்கப் போவதாகப் பாகிஸ்தானிலுள்ள இராணுவ ஆட்சியாளர்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர் ; ஆனுல், நம்முடைய முன்னெச்சரிக்கையையும் -- தயார் நிலையையும் கண்டு அவர்கள் அப்பாதையிலிருந்து திரும்புவார்களென்று நம்புகிறேன்.

" நமது எச்சரிக்கை நிலையைத் தளர்த்த நாம் தயாராக இல்லை ; வங்க தேச அகதிகள் தம் நாட்டுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய விதத்தில் திருப்திகரமான ஒரு தீர்வு ஏற்படும் வரையில் எல்லைப் புறங்களிலிருந்து நமது படைகளைத் திரும்பப் பெறவும் நாம் தயாராக இல்லை "

என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம், நாடாளுமன்ற மேலவையில் கொண்டு வரப்பட்டிருந்த ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இந்தியா!-- பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் படைக் குவிப்பையும், மற்றும் இதர நடவடிக்கைகளையும் பற்றி உறுப்பினர் கேட்டிருந்தனர் ; அதற்குப் பதிலளிக்கையில், பாதுகாப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது :—

" எந்தவிதமான நிலைமையையும் சமாளிப்பதற்கு முழு ஆயத்த நிலையில் இந்தியத் தற்காப்புப் படைகள், கிழக்கு மேற்குப்புற எல்லைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

" முக்கியமான பகுதிகளிலும், நிறுவனங்களிலும் நாச வேலை -- விமானத் தாக்குதல் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனர்.

" பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் விவேகத்துடன் நடந்து கொள்ளுவார்களென்றும், சரித்திரத்தின் படிப்பினையை அவர்கள் மறந்து விடமாட்டார்களென்றும் நம்புகிறேன்.

அவர்கள் தம்முடைய இப் இப்போதைய போக்கை மாற்றிக் கொண்டு, ஷேக் முஜிபுர் ரகிமான் தலைமையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை செய்வார்களென்றும் நம்புகிறேன் ; இது ஒன்றுதான் அவர்களுக்குள்ள வழி.

வங்க தேச மக்களுக்கும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல்தான் இந்த நிலைமைக்கு மூல காரணம்; வங்க தேச மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாமல் இதுவரை கேள்விப்பட்டிராத அவ்வளவு கொடும் அடக்குமுறைகளைப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இந்த அகதிகளுக்கு நாம் தங்குமிடமும், உதவியும் அளிக்காமல் இருகக முடியாது ; ஆனுல் அவர்கள் தொடர்ந்து இங்கேயே இருப்பது நமக்குப் பொறுக்க முடியாத சுமையாக இருக்கிறது ; நமது பொருளாதார அமைப்புக்கே இது அபாயம் விளைவிப்பதாகயிருக்கிறது.

வங்க விடுதலைப் படையினரின் பலம் வரவரப் பெருகிக்கொண்டிருப்பது பாகிஸ்தான் இராணுவத்திற்கு அச்சத்தை விளைவித்திருக்கிறது ; இந்தியா மீது பழியைச் சுமத்துவதன்மூலம் தாம் செய்த தவறுகளைப் பாகிஸ்தான் தலைவர்கள் மூடி மறைக்கப் பார்க்கின்றனர்.

மிகுந்த அவதிக்குள்ளாகியிருந்த மக்களுக்கு அனுதாபமும் உதவியும் அளித்த ஒரே ஒரு குற்றத்தைத்தான் நாம் செய்திருக்கிறோம்."

தலைமைக் கழக அறிவிப்பு

புதுவை மாவட்ட தி.மு.க.

புதுவை மாவட்ட தி.மு.க. செயலாளர் திரு. எம்.ஏ. சண்முகம் அவர்கள் தமது உடல்நிலை காரணமாகக் கடந்த மூன்று திங்களாகப் புதுவை மாவட்டக் கழக நிர்வாகப் பொறுப்பை, மாவட்டத் துணைச்செயலாளர் திரு. ப.அ. கரீம் அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்.

உடல்நிலை சீர்பட்டதன் காரணமாகத் திரு. எம்.ஏ. சண்முகம் அவர்களே மாவட்டக் கழக நிர்வாகப் பொறுப்பை மீண்டும் இன்று முதல் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மாவட்டக் கழகச் சம்பந்தமான பணிகளுக்கு இனி மாவட்டச் செயலாளரிடமே தொடர்பு கொள்ளுமாறு புதுவை மாவட்டக் கழகத் தோழர்கள் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்' சென்னை-18
15—11—1971

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர், தி.மு க. (அமைப்பு)

இனியேனும் பாகிஸ்தான் திருந்துமா?

வங்க தேசப் பிரச்சினை தீரும்வரை எல்லையிலிருந்து படை திரும்பாது

தலைமையமைச்சர் திட்டவட்ட அறிவிப்பு

மேற்கத்தி வல்லரசுகளும் நிலைமையை உணர்ந்துகொண்டதாகத் தகவல்

புதுடில்லி, நவ. 16—

" இந்தியாமீது போரைத் திணிப்பதன்மூலம் அல்லது மிரட்டல்களின்மூலம் நன்மை எதுவும் ஏற்பட முடியாது என்பதை இனியாவது பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் உணருவர் என்று நம்புகிறேன்.

" இந்தியாவின் பாதுகாப்புக்கு வங்க தேசப் பிரச்சினை பெரும் அபாயத்தை விளைவித்திருப்பதால், இப்பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வு காணப்படும்வரையில் எல்லையிலிருந்து படைகளைத் திரும்பப்பெற இயலாது என்பதை, உலக நாடுகளின் தலைவர்களிடம் தெளிவுற விளக்கியிருக்கிறேன் "

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்றத்தில் விளக்கிக் கூறினர்.

வெளிநாடுகளில் தாம் சுற்றுப் பயணம் செய்தது குறித்த அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் அவர் தாக்கல் செய்தார் ; அதில் கூறப்பட்டிருப்பதாவது :-

" வங்க தேச மக்களால் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடன் பேச்சு நடத்துவதன் மூலமும், மக்களின் நியாயமான விருப்பங்களுக்கு இசைவாகவும் வங்க தேசப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதை நான் சென்ற 6 நாடுகளும் -- இதர நாடுகளும் தற்போது உணர்ந்துவிட்டன என நம்புகிறேன்.

'பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம்' என்ற வாதத்தைக் கூறிக்கொண்டு இந்நாடுகள் நீண்ட காலமாக அலட்சியம் காட்டிவந்தன ; தற்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் அவசியம் குறித்து அந்நாடுகளிடையே அவசர உணர்ச்சி வளர்ந்துவருகிறது.

வங்க தேச மக்களின் போராட்டத்தை இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்குமிடையேயான போராக மாற்றி -- அதில் ஐ.நா.-வையும் சிக்கவைப்பதன் மூலம் இப்பிரச்சினையை மூடி மறைக்க பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சி அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது."

பாகிஸ்தானுக்கு மேற்கொண்டு ஆயுதங்களை அனுப்புவதை நிறுத்தி வைக்க அமெரிககா முடிவு செய்துள்ளது என்று வாஷிங்டனில் தாம் தங்கியிருந்தபோது தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக அவர் சொன்னர்.

பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்தும் பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் எதுவும் அனுபபப்படவில்லை என்றும் தமக்குத் தெரிவிக்கப்பட்டது என்று இந்திரா காந்தி கூறினர்.

வங்க தேச மக்கள்மீது தீர்வு ஒன்றைச் சுமத்த எந்த நாட்டுக்கும் உரிமையில்லை என்பதும், பலாத்காரத்தின்மூலம் சுதந்தர உணர்ச்சியை ஒழித்துவிட முடியாது என்பதும் நன்கு உணரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினர்.

சிம்சன் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்

அமைச்சர் என். வி. நடராசன் அளித்த உறுதிமொழி

சென்னை, நவ. 16—

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அளித்த உறுதிமொழியின்மீது ஏனைய சிம்சன் தொழிலாளர்கள் அனைவரும் இன்று வேலைக்குத் திரும்பினர்.

சிம்சன் தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைக்குள்ளும் -- வெளியேயும், தொடர்ந்து பாதுகாப்புத் தரப்படும் என்றும், அதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவேண்டாம் என்றும் தொழிற்சங்கத் தலைவர்களிடம் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தெரிவித்தார்.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்களை, நேற்று கோட்டையில் தி.மு.க. அல்லாத தொழிற்சங்கத் தலைவர்கள் சுமார் 2-மணி நேரம் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர் ; வேலை நிறுத்த நிலவரம் குறித்து எடுத்துக் கூறினர்.

இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அமைச்சர் கூறியிருப்பதாவது :—

" தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைக்குள்ளும் -- புறமும் பாதுகாப்பு தொடர்ந்து இருக்கும் என்றும், அதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டாம் என்றும் திட்டவட்டமாகக் கூறினேன்.

" தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினுல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்க அரசு ஆவனசெய்யும் என்றும் கூறப்பட்டது.

" எஸ். ஆர். வி. எஸ். நிறுவனத்தில் ஆட்குறைப்பு செய்யப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க அரசு முயற்சி எடுக்கும் என்றும் அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

" என்னோடு கலந்து பேசியதற்கிணங்க, வேலைநிறுத்தத்தில் ஈடுபாடு கொண்டுள்ள தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்புவது குறித்துத் தொழிலாளர்களிடம் தெரிவித்து ஆவன செய்வதாக என்னைச் சந்தித்த தொழிற்சங்கத் தலைவர்கள் கூறியுள்ளனர்."

மாதவரம் நகரியம்

உறுப்பினராகக் கழகத் தோழர் நியமனம்

மாதவரம் நகரிய உறுப்பினராகக் கல்பாளையம் தி.மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் என். ஏழுமலை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கோவையில் குழந்தைகள் திரையரங்கம்

கோவை, நவ. 15—

கோவையில் குழந்தைகளுக்கான திரையரங்கம் ஒன்று ரு 6 இலட்சம் செலவில் கட்டப்படும் என்றும், இதற்காக மத்திய சிறைக் காம்பவுண்டுக்குள் சிறிதளவு இடம் பெறப்படும் என்றும் கோவை மாவட்டக் கலெக்டர் எச்.பி.என். ஷெட்டி தெரிவித்தார்.

குடும்ப நலச் சிகிச்சை வார்டு திறப்பு விழா

சென்னை—எழும்பூர் அரசினர் தாய் - சேய் நல மருத்துவமனையில், குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சைக்கான இருபது படுக்கைகள் கொண்ட வார்டை 17-11-71 மாலை 6-30 மணிக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்துவைப்பார் ; மக்கள் நல்வாழ்வு -- குடும்ப நலத் துறைச் செயலாளர் ஜே ஏ. அம்பாசங்கர் விழாவுக்குத் தலைமைவகிப்பார்.

கந்தசாமி கல்லூரி பேரவைத் துவக்கவிழா

சென்னை—அறிஞர் அண்ணு நகரில் உள்ள சி. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரியின் பேரவையும், அதன் கிளைகளும் 17—11—71 மாலை 4 மணிக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் துவக்கிவைக்கபபடும் ; திரு. வி. முனுசாமி எம்.சி. தலைமைவகிப்பார்.

கி. ஆ. பெ. விசுவநாதம் பிறந்த நாள் விழா

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் 73-வது பிறந்த நாள் விழா, 17—11—71 மாலை 6 மணிக்கு, சென்னை—எஸ்பிளனேடு ஒய் எம்.சி.ஏ. பட்டி மன்றத்தில் நடைபெறும் ; திரு. மா. சண்முகசுந்தரம் தலைமைவகிப்பார் ; அமைச்சர் திரு. என். வி. நடராசன், நீதிபதி திரு. எஸ். கணேசன், ஔவை து. நடராசன், அன்புப்பழநீ ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார் ; திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் விழாவில் கலந்துகொள்வார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-18) [illegible]